நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் சுற்றலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் புதுமைப் பெண் திட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி மடல்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், உதகை நகரமன்றத்தலைவர் திருமதி.வாணீஸ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பிரவீணா தேவி உட்பட பலர் உள்ளனர்.

சேலம் கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகி வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் தம்மம்பட்டி பேருந்து நிலையம் முன்பு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் ஆ. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ் .ஆர். சிவலிங்கம், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் துறையூர் துரை.பாண்டியன், மதுரை அலெக் ஸாண்டர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர் கூட்டத்தில் சுரேஷ்குமார், சின்னதுரை, ஏ.ஏ.ஆறுமுகம், ரேகா பிரியதர்ஷினி, பொதுக்குழு உறுப்பினர்கள் சோமசுந்தரம், முத்துலிங்கம், சந்திரமோகன், மனோகரன், சங்கர், கோபால், ராஜா, சேக் மைதீன் ,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் வேங்கையன், கிஷோர், மகேஸ்வரன், சரண்யா, உமா சங்கர், வெண்ணிலா சேகர், மாணிக்கம், விஜயகுமார், டாக்டர் செழியன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், ராஜேந்திரன், சிவராமன், மருதமுத்து, மூர்த்தி, சித்தார்த்தன், அழகுவேல், மணி பாலமு ருகன், ரத்தினவேல், பாலசுப்பிரமணியம், வேல்முருகன், சண்முகம், பால முருகன், காங்கமுத்து, வெங்கடேசன், பாபு, வேலு, சரவணன், முருகேசன், செல்வம், ராஜேந்திரன் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்தில் அருண் பிரசாத் நன்றியுரையாற்றினார்.

தமிழ்நாட்டில் ஒருபோதும் இந்தியைத் திணிக்க முடியாது!

வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் - தயாநிதி மாறன் எம்.பி. பேச்சு!

சென்னை, ஜன. 28 - தமிழ்நாட்டில் ஒருபோதும் இந்தியைத் திணிக்க முடியாது! என்று மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி., பேசும்போது குறிப்பிட்டார்.

சென்னை அமைந்த கரையில் நடைபெற்ற மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் ஆற்றிய உரை வருமாறு :

சென்னை மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் நடைபெறும் இந்த வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்திற்கு வருகைப் புரிந்து சிறப்புரையாற்றவிருக்கும் தமிழ்நாட்டைக் காக்கின்ற, தமிழ் மக்களைக் காக்கின்ற, தமிழ் மொழியைக் காக்கின்ற இந்தியாவின் தலைசிறந்த முதல்வர் யாரென்றால் நம் தளபதிதான் நம் தளபதிதான்; என்பதை பெருமையாக சொல்வதோடு, இன்று ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படுகின்ற அளவுக்கு சிறப்பான திராவிட மாடல் ஆட்சியைத் தந்துகொண்டிருக்கும் நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்திலேயே ஒரு மொழிக்காக எங்கும் யாரும் அவர்தம் உயிரைத் தியாகம் செய்ததில்லை. ஆனால் அந்த வரலாறு எந்த மொழிக்கு உள்ளதென்றால், அது நம் தமிழ் மொழிக்குதான், அதற்குக் காரணம் என்னவென்றால், 1938ஆம் ஆண்டு முதல் இந்தி திணிப்பு என்ற முறையிலே நம் மொழியை அழிக்க அங்கிருந்து வந்தவர்கள் செய்த சதியால் நம் தமிழ் மக்களும், திராவிட மக்களும் தொடர்ந்து அதை எதிர்த்தும் போராடுகிறார்கள்.

இந்தியைத் திணிப்பதில் அவ்வளவு வெறி!

ஆளுகின்ற பா.ஜ.க, குறிப்பாக பிரதமர் மோடி அவர்கள் கடந்த 9½ ஆண்டுகளாக இந்தித் திணிப்பை தீவிரமாக கையில் எடுத்திருக்கிறார். ஆட்சிக்கு வந்ததும் அனைத்து துறைக்கும் பெயர்களை இந்தியிலே மாற்றினார். இப்போது கூட கடந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரிலே இந்திய தண்டனைச் சட்டம் (IPC), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CRPC), இந்திய சாட்சிய சட்டம் ஆகியவற்றை இந்தி மொழியிலே மாற்றினார். அப்போதே நிலைக்குழு வில் நானும் என்.ஆர்.இளங்கோ அவர்களும் அது குறித்து, "75 ஆண்டுகளாக ஆங்கிலத்தில் இருக்கும் இந்திய சட்டத்தின் பெயர்களை இப்போது ஏன் இந்தியில் மாற்றுகிறீர்கள்?" என்று கேட்டோம். அதற்கு நாட்டின் உள்துறை செயலாளர், "நாங்கள் இந்தியில் மாற்றவில்லை, இந்திப் பெயர்தான் ஆனால் அதை ஆங்கிலத்தில்தான் எழுதுவார்கள், அது அரசியலமைப்புப்படி தவறில்லை" என விளக்கம் தருகிறார். காரணம் இந்தி மொழியைத் திணிப்பதில் அவ்வளவு வெறி.

நான் கேட்கிறேன்; ஏன் இப்படித் இந்தியை திணிக்கிறீர்கள்?. வளர்ந்த நாடான ஐரோப்பிய நாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள், அங்கு அவர்கள் தங்களது சொந்த தாய் மொழியில்தான் பேசுகிறார்கள். ஆனால் நமது இந்தியாவில், ராஜஸ்தான் மாநிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள், சுதந்திரத் திற்கு முன்பு வரை அங்கு 97 சதவீதம் பேர் மார்வாடி மொழியைப் பேசினார்கள். ஆனால் 75 ஆண்டுகள் கழித்து இன்றைய நிலையில் வெறும் 5 சதவீதமோ10சதவீதம்மக்களோதான் அவர்தம் தாய்மொழியைப் பேசுகிறார்கள்.

தாய்மொழி அழிப்பு!

எங்கெல்லாம் இந்தி திணிக்கப்பட்டதோ அந்த மாநிலத்தில் எல்லாம் அம்மக்களின் தாய் மொழி அழிந்து கொண்டிருக்கிறது. இதை பொதுவாக செய்து வருகிறார்கள். அதன் மூலம் இந்தி பேசுகிற மக்கள் இருந்தால் போதும்; நாம் இந்தியாவை ஆளலாம் என்னும் எண்ணத்தில் பா.ஜ.க செயல்பட்டு வருகிறது. ஆனால் அந்தக் கனவு, தமிழ்நாட்டில் நமது தலைவர் தளபதி அவர்கள் இருக்கும் வரை நிறைவேறாது என்று கூறி, வருகிற காலம் தேர்தல் காலம், தேர்தல் காலத்தில் நமக்கு பிரதான எதிரி என்றால் அது அ.இ.அ.தி.மு.க. தான், ஆனால் இன்று அவர்கள் பா.ஜ.கவிடம் இருந்து பிரிந்துவிட்டதாகவும், அவர்களுடன் கூட்டணி இல்லை என்றும் நாடகம் போடுகின்றனர். இந்த பொய்யை மக்கள் யாரும் நம்ப மாட்டார்கள்.

சரி அப்படிதான் பிரிந்தார்களே, சமீபத்தில் பொதுக்குழு நடத்தினார்கள், அதில் ஏதாவது ஒரு தீர்மானம், மோடியை எதிர்த்தோ அல்லது பா.ஜ.க.வை எதிர்த்தோ நிறைவேற்றினார்களா, இல்லை. அவர்கள் வாசித்த அனைத்து தீர்மானங்களும் தி.மு.க.வை எதிர்த்துதான். அது மட்டுமல்ல; அவர்கள் சிறுபான்மை யினரின் பாதுகாவலர்களாம். அவர்கள் மட்டும் நாடாளுமன்றத்தில் ஒழுங்காக சி.ஏ.ஏ. சட்டத்தை எதிர்த்து வாக்களித்திருந்தால் அந்தச் சட்டம் நிறைவேறி இருக்காது. அவ்வளவு ஏன் சட்டமன்றத்தில் எடப்பாடி பழனிச்சாமி சொல்ல வில்லையா, இந்தச் சட்டத்தினால் யாருக்குமே பாதகம் இல்லையென்று. இவ்வளவையும் செய்துவிட்டு இன்று சிறுபான்மை யினரை ஏமாற்றும் கட்சியாக, அதன் தலைவராகவும் இருக்கிறார், எடப்பாடி பழனிசாமி. இதை யெல்லாம் மக்கள் நம்ப மாட்டார்கள்.

கடந்த 2019, 2021 ஆம் ஆண்டு தேர்தல்களில் எப்படி நம் தலைவர் தளபதி அவர்கள் வெற்றியைக் கண்டார்களோ, அதேபோல் வருகின்ற 2024 தேர்தலிலும் வெற்றி பெற்று நம் தமிழ் நாட்டை காப்பாற்றுவார்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. பேசினார்.

அரியலூரில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

அரசு தலைமை கொறடா கோவி.செழியன் பங்கேற்பு!

அரியலூர், ஜன. 28 - அரியலூரில் பேரறிஞர் அண்ணாசிலை அருகில் மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகி களுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ. பிரபாகரன் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகர், லதாபாலு, நகர செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், வா.சௌந்தரராஜன், ரெ.அசோகசக்ரவர்த்தி, மா.அன்பழகன், வி.எழில் மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற வீர வணக்கநாள் பொதுக்கூட்டத்தில் அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், தலைமைக் கழகப் பேச்சாளர் மதிவாணன் ஆகியோர் தமிழைக் காக்க தனது இன்னுயிரை ஈந்த மொழிப் போர் தியாகிகளின் பெருமைகளை எடுத்துக் கூறி உரையாற்றினார்கள்

இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாளை.அமரமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் மு.ஞானமூர்த்தி, ஒன்றிய பெருந்தலைவர் சுமதி அசோகசக்ரவர்த்தி, மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் கீதா ஜெயவேல், நகர்மன்ற தலைவர் சாந்திகலைவாணன், மொழிப்போர் தியாகிகள் வாரணவாசி கணேசன், உல்லியகுடி தங்கராசு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் வை. முருகானந்தம், மீனா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வம்,மாவட்ட இலக்கிய அணி கருப்புசாமி,நகர் மன்ற துணைத் தலைவர் கலியமூர்த்தி நகர் மன்ற உறுப்பினர்கள், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ப.உதயகுமார் தலைமை!

நாகையில் மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

என். கௌதமன், கந்திலிகரிகாலன், குடியாத்தம் புவியரசி சிறப்புரை!

நாகை, ஜன. 28 - நாகை மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் தி.மு.க. பொதுக்கூட்டம் நாகை அவுரிதிடலில் நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ப.உதயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எலக்ட்ரிக்கல் ஆ.பாலாவரவேற்றார்.

பொதுக்கூட்டத்தில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் கந்திலிகரிகாலன், குடியாத்தம் புவியரசி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் பொதுக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், இலமேகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன், மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன், நகர கழக செயலாளர் இரா மாரி முத்து, எம். ஆர்.செந்தில்குமார் ஒன்றிய கழக செயலாளர் ஆ தாமஸ் ஆல்வா எடிசன், ஆர்.டி.எஸ். சரவணன், சோ.பா. மலர்வண்ணன் பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.பழனியப்பன், கோ.சிவகுமார், மாவட்ட கழக சார்பு பணி அமைப்பாளர்கள் ஜி.என். கார்த்தி । இளம் சுந்தர், பி முருகானந்தம், வி.கமல், கா தமயந்தி, ஆர்.பால்ராஜ் ஒன்றிய குழு தலைவர் ஆர். ஜி.தமிழரசி நகரக் கழக நிர்வாகிகள் வெற்றிலை கடை சிவா, பி.திலகர், குலோத்துங்கன்

மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி கலையரசன், எஸ்.சுரேஷ் குமார், எஸ். டேனியல் சத்தியா உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர் முடிவில் மாவட்டம் மாணவனை துணை அமைப்பாளர் பி. மணிகண்டன் நன்றி கூறினார்.

ஒன்றிய அரசின் கட்டாய இந்தித் திணிப்பை கண்டித்து குமாரபாளையத்தில் நடைபெற்ற போராட்டத்தில் உயிர்நீத்த மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் 15 பேர் காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மொழிப்போர் போராட்ட தியாகிகள் நினைவாக அமைக்கப்பட்ட தியாகிகள் நினைவுத் தூணிற்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ராஜாராம், நகரச் செயலாளர்கள் விஜய்கண்ணன், ஞானசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி முருகன் சிறப்புரையாற்றினார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், தலைமைக் கழகப் பேச்சாளர் வேதா உதயசூரியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், நகர செயலாளர் கண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில்

திண்டிவனத்தில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

பூச்சிமுருகன் - வேதா உதயசூரியன் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

திண்டிவனம், ஜன. 28 - விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் தலைமை நிலைய செயலாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சிமுருகன், தலைமை கழக பேச்சாளர் வேதா உதயசூரியன், அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் சார்பில் மொழிப்போர் தியாகி களுக்கு வீர வணக்கம் நாள் பொதுக்கூட்டம் திண்டிவனம் காந்தியார் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டமாணவரணி அமைப்பாளர் எம்.யு.பிரசன்னா தலைமை தாங்கினார். திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட மாணவரணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுபாஷ் சந்திரபோஸ், மதிவாணன், லோகநாதன், ஞானசேகர், பெனாசிர்,எம்.டி பாபு,டி கே பிரமேஷ், விஜயகுமார், எஸ் என் ஆர் உதயகுமார், அண்ணாமலை, ஆகியோர் துவக்க உரை நிகழ்த்தினர்.

திண்டிவனம் நகர நிர்வாகிகள் நிர்மலா ரவிச்சந்திரன், கதிரேசன், ஆர்.ஆர். எஸ். ரவிச்சந்திரன்,பெருமாள், டி.கே.பி.பெருமாள், அசோகன், கபிலன், ரேணுகா, கௌதமன், தாஜ்தீன், சின்னா ராஜேந்திரன், ராஜசக்தி, பி எஸ் முருகன் சின்னதுரை வி. எஸ்.முருகன், சின்னதுரை, அசோக் குமார்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுக்கூட்டத்தில் தலைமை நிலைய செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், தலைமை கழக பேச்சாளர் வேதா உதயசூரியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு மொழிப்போர் தியாகி அகூர் ராமகிருஷ்ணனுக்கு பொன்னாடை அணிவித்தும், உயிர்நீத்த மொழிப்போர் தியாகிகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி சிறப்புரை ஆற்றினர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் செஞ்சிமஸ்தான்:

மொழிப்போர்த் தியாகிகள் தமிழ் மொழிக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் போராடி உயிர் நீத்த துள்ளனர். இவர்களின் தியாகத்தால் தமிழ் மொழிகாக்கப்பட்டு வருகின்றன.

மத்தியில் விவசாயிகளை வஞ்சித்த கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு பிரதமர் மோடி தொழில் தொடங்க அனுமதித்துள்ளார்.தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு கலைஞர் கடனை தள்ளுபடி செய்து இலவச மின்சாரத்தை வழங்கினார். கலைஞரின் மகன் முதலமைச்சர் மு க ஸ்டாலின் சொன்னதை செய்வோம் செய்வதை சொல்வோம் சொல்லாததையும் செய்வோம் என்று இரண்டு லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்கு வழங்கிய ஆட்சி தமிழ்நாடு ஆட்சி டெல்லியில் கொடுத்திருக்கிறார்களா என கேள்வி எழுப்பி அமைச்சர் செஞ்சி மஸ்தான் திண்டிவனத்தில் நடைபெறும் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதி மொழி எடுத்துக்கொண்டு மத்தியில் அதிகாரத்தில் உள்ள மக்களை ஏமாற்றுகின்ற ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டும் தமிழகம் புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கூட்டணி அமோக வெற்றி பெற வேண்டும் எதிர்த்து நிற்கின்ற கூட்டணிகள் டெபாசிட் இழக்க வேண்டும்என்ன அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன்பேசுகையில்:

அடிமை அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தும் ஒன்றிய பி.ஜே.பி. அரசிடம் பாழ்பட்டிருந்த தமிழ்நாட்டின் வளர்ச்சியை மீட்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டார். அந்த வகையில் தினந்தோறும் புதிய அறிவிப்புகளை வெளியிட்டு ஏராளமான திட்டங்களை முதலமைச்சர் செயல் படுத்தி வருகிறார் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் தமிழ்நாட்டில் என்ன திட்டங்கள் செயல் படுத்தி உள்ளனர்என அந்த மாநில அதிகாரிகளை இங்க வரவழைத்து அந்த மாநிலத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள திட்டங்களை செயல் படுத்தி வருகின்றனர்.

இது போன்ற திட்டங்கள் இந்தியா முழுவதும் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண் டும் என அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன். சீத்தாபதி சொக்கலிங்கம்,தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர்ரமணன், துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்நெடுஞ்செழியன், சீனி சின்னசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் வீடூர்ரவி, சாந்தி ஏழுமலை, பாலகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம்,ராஜாராமன், அண்ணா துரை, தயாளன் ,துரை, ரவிச்சந்திரன், பழனி, மணிமாறன், செழியன், இளம்வழுதி, மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், மாவட்ட கவுன்சிலர்கள் எழிலரசி ஏழுமலை, மனோசித்ரா ராஜேஸ்வரன், மகேஸ்வரி குமரேசன், விஜயன், புஷ்பவள்ளி குப்புராஜ், அன்புசெழியன்,சசிகலா மோக சுந்தரம், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த், கோபிநாத், அன்சாரி, சிவகாமி, ரகுபதி, தங்கராஜ், திருமலை, ரவிச்சந்திரன், அண்ணாதுரை, சந்திரன், செந்தில் முருகன், கே. செந்தில் குமார், விஜயராகவன், பி. செந்தில்குமார், ராஜா, காதர் நவாஸ், ஜி. தமிழரசன்,புலவர் தமிழரசன், திலகவதி, சத்திய பிரியன், ரோமியன்.திண்டிவனம் நகர நிர்வாகிகள் சுந்தர மூர்த்தி சாரங்கபாணி ரகுபதி வேலு ஏழுமலை வெங்கடேசன் கோவிந்தராஜ் சங்கர் ராஜேந்திரன் பிரகாஷ் அன்னை சந்தானம் அப்துல் ரகுமான் சதீஷ் ஆறுமுகம் கணேஷ் குமார் சுதர்சனம் விஸ்வநாதன் ராஜேஷ் சாகுல் சேகர் ரவிச்சந்திரன் பாஸ்கர் முரளிதரன் குலோத்துங்கன் நகர மன்ற உறுப்பினர்கள் பல்வேறு அணிகளின் மாவட்டத் தலைவர் துணைத் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் திண்டிவனம் நகர மன்ற முன்னாள் உறுப்பினர்கள் முன்னாள் கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.நகர மாணவரணி அமைப்பாளர் அஜய் நன்றி கூறினார்.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கோட்டை மைதானத்தில் வீரவணக்க நாளை முன்னிட்டு மாவட்ட கழகச் செயலாளர் இரா இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ். எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி. கலந்து கொண்டு பேசினார். மற்றும் மாநில மாணவரணி துணைச் செயலாளர் இரா.தமிழரசன் தலைமைக் கழகப் பேச்சாளர். ஆம்பூர் பொய்யாமொழி, மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு மேயர். ஆராமச்சந்திரன் மாநில உதய நிதி நற்பணி மன்ற பொதுச் செயலாளர் பி.கே.பாபு.சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைக்கண்ணன். சா.சுப்பிரமணி, பெ.அசோகன், பா.ரகுபதி எம்.எம்.ஷெரீப், பகுதி செயலாளர் சி.பிரகாஷ், பி.கோமதி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.கோகுல்தாஸ், மணிகண்டன், கே.ஆர்.முருகன், வி.கணேசன், ஜெ.தினகரன், சையத் இப்ராகீம் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினார்கள்.